பத்திரிக்கை செய்தி

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணிபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் மாநில விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 3.12.2025 உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படவுள்ளது.

| வ. எண் | விருதுகள் விவரம் | விருதுகள் எண்ணிக்கை | விருது விவரம் |
|---|---|---|---|
| 1 | <u>சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர்</u><br>1. கை, கால் பாதிக்கப்பட்டோர் (LD) அல்லது தொழுநோயிலிருந்து குணமடைந்தோர் (LC),<br>2. பார்வை திறன் பாதிக்கப்பட்டோர்(VI),<br>3. செவித் திறன் பாதிக்கப்பட்டோர்(HI),<br>4. அறிவுசார் குறைபாடுடையோர் (ID),<br>5. பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு (SpLaD),<br>6. Developmental Disorder (புறவுலக சிந்தனையற்றோர்(ASD), குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு (SLD)],<br>7. மன நோய் (MI),<br>8. Disability caused due to blood disorder இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு (He), இரத்த அழிவுச்சோகை (Th), அரிவாளனு இரத்தச் சோகை (SCD)],<br>9. நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு திசு பண்முகக் கடினமாதல் (MS), நடுக்கு வாதம் (PD)],<br>10. பல்வகை குறைபாடு [Multiple Disabilities(MD)] | 10 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஹெலன் கெல்லர் விருது - (பார்வைத் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்கள் – தலா ஒரு விருது) | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | சிறந்த ஆசிரியர் – (அறிவுசார் குறைபாடுடையோருக்கு கற்பித்தல்) | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

| | | | |
|---|---|---|---|
| 4 | சிறந்த சமூகப் பணியாளர் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | மாற்றுத்திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | ஹெலன் கெல்லர் விருது - ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிலும் செவித் திறன் குறையுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர் | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 8 | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் (அறிவுசார் குறைபாடுடையோருக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்) | 1 விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 9 | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 10 | பொதுக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ள சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் | 2 விருதுகள் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| | மொத்தம் | 22 விருதுகள் | |

மேற்காணும் விருதுகளுக்கு விண்ணப்பிக்கும் விருதாளர்கள், **https://awards.tn.gov.in** என்ற வலைத்தளத்தில் ***26.10.2025 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள்*** விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. வலைத்தளத்தில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், விண்ணப்பத்தின் ***இரண்டு நகல்களை 26.10.2025 அன்று பிற்பகல் 5.00 மணிக்குள்*** சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்